மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், இராமேஸ்வரம்

OS.No.42/2015

2024–ம் ஆண்டு மார்ச் திங்கள் 11–ம் நாள் இந்திய ஆணையுறுதி சட்டம் பிரிவு 3 மற்றும் 4–ன் படி வாதி/பிரதிவாதி என்பவரை சாட்சியத்தின் வாக்குமூலம் சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு விசாரிக்கப்பட்டார்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | குமார் (PW1) | த/பெ. | : | |
| கிராமம் | : | | தாலுகா | : | |
| சமயம் | : | | ஜாதி | : | |
| வயது | : | | தொழில் | :: | |

<u>நாள்.11.03.2024</u>

<u>வா..சா.1</u>

<u>1ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை :–</u>

நான் எங்கே குடியிருக்கிறேன் என்றால் தீட்சிதர் கொல்லையில் குடியிருந்து வருகிறேன். மீன்பிடி தொழில் செய்து வருகிறேன். பத்தாம் வகுப்பு வரை படித்துள்ளேன். 1ம் வாதி பர்வதவர்த்தினி எனது மூத்த சகோதரி என்றால் சரிதான். அவருக்கு இந்த வழக்கின் முழு விபரங்களும் தெரியும். வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ 6 மற்றும் வா.சா.ஆ.9, வா.சா.ஆ.10 ஆகியவை என்னால் தயார் செய்யப்பட்டு எனது சகோதரியிடம் கொடுக்கப்பட்டு அவரால் கையொப்பம் செய்யப்பட்டு காவல்துறைக்கும், வருவாய் அதிகாரிகளுக்கும் அனுப்பபட்டது என்றால் சரிதான். எனது சகோதரர்கள், சகோதரிகள் கையொப்பம் எனக்கு தெரியும் என்றால் சரிதான். இந்த வழக்கில் தாக்க்ல் செய்யப்பட்ட வா.சா.ஆ.13 முதல் வா.சா.ஆ,18 மற்றும் வா.சா.ஆ.21 முதல் வா.சா்.ஆ.23 ஆகியவற்றில் உள்ளவிபரங்களை நான் படித்து தெரிந்து கொண்டு அவைகள் சரியானவை என்பதால் வழககில் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். வா.சா.ஆ.15 கொண்டாடும் பாத்திய விடுதலை பத்திரம் சேதுகோனாருக்கு எழுதிக்கொடுத்தது யார் என்றால் கிருஷ்ணக்கோனார் மனைவி பஞ்சம்மாள் எழுதிக்கொடுத்துள்ளார். கொண்டாடும் பாத்திய விடுதலை பத்திரம் என்ன என்றால் பாத்தியத்தை உரிமை கொண்டாடுவது பாத்திய விடுதலை பத்திரம் ஆகும். பஞ்சம்மாள் அந்த பாத்திய விடுதலை எழுதிக்கொடுதத சொத்திற்கு எவ்வாறு உரிமையுடையவர் ஆவார் என்றால் எங்களுக்கு கிரையம் கொடுத்த லட்சுமி அம்மாள் கணவர் கிருஷ்ணக்கோனார் அனுபவத்தில் இருந்தது கிருஷ்ணக்கோனாரிடமிருந்து லட்சுமி

அம்மாள் வைத்த ஒத்தியை சாட்டிகை செய்து எனது தகப்பனார் கிரையம் வாங்கினார். பஞ்சம்மாளின் கணவர் பெயர் கிருஷ்ணக்கோனார் ஆகும். லட்சுமி அம்மாளின் கணவர் கிருஷ்ணக்கோனார் என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். கொண்டாடும் விடுதலை பாத்தியத்தில் உள்ள சொத்து எந்த சர்வே எண்ணில் உள்ளது என்றால் 240/1 ல் இருந்து தற்போது 240/8 ல் உள்ளது. எனது தகப்பனார் சொத்தை விடுதலை பத்திரம் வாங்கும்போது புல எண் இருந்ததா என்றால் இல்லை நான்குமால் சொல்லப்பட்டுள்ளது. என்னிடம் காட்டப்படும் கொண்டாடும் விடுதலை பத்திரம் வா.சா.ஆ 15 ஆவணத்தில் சர்வே எண் உள்ளதா என்றால் இல்லை அந்த காலத்தில் கிடையாது நான்குமால் மட்டும்தான் பதிவு செய்யப்படும். வா.சா.ஆ.15 ஆவணம் 1968 ல் எழுதப்பட்டது என்றால் சரிதான். அப்போது சர்வே எண் எழுதும் பழக்கம் இல்லை என்று சொல்கிறேன் என்றால் சரிதான். அந்த வா.சா.ஆ.15 விடுதலை பத்திரத்தில் உள்ள சொத்தின் கிழமேல், தென்வடல் அளவு எவ்வளவு என்றால் கிழமேல் அடி 45, தென்வடல் ஞாபகம் இல்லை. மொத்தம் எத்தனை சதுரஅடி என்றால் 5 1/2 செண்ட் ஆகும். அந்த பத்திரத்தில் நீளம் 41 அடி, அகலம் 14 அடி மொத்தம் 574 சதுரடி என சொல்லப்பட்டிருந்தால் அது தவறு என்றால் சரிதான் ஆனால் பத்திரத்தில் கிரையப் பத்திரத்திற்கு கட்டுப்பட்டது என்று ஊர்பஞ்சாயத்தில் பஞ்சவர்ணம் எழுதிக்கொடுத்துள்ளார். ஊர்பஞ்சாயத்தில் யார் கலந்து கொண்டுள்ளார்கள் யாதவர் தெருவைச் சேர்ந்த வேலாண்டி என்பவர், தங்கச்சிமடத்தை சேர்ந்த தலையாரி பெயர் ஞுபாகம் இல்லை, பெரியகருப்பன் ஆகியோர் ஆவார்கள். இந்த வா.சா.ஆ.15 விடுதலை உரிமை பத்திரத்தின் மூலம் எந்த உரிமையும் மாற்றப்படவில்லை என்றால் சரியல்ல. பஞ்சம்மாள் அந்த இடத்தினை எழுதிக்கொடுப்பதற்கு இடத்தினை கிரையம் வாங்கியிருந்தாரா இல்லை பட்டா பெற்றிருந்தாரா என்றால் பட்டா, கிரையம் இல்லை அவருடைய அனுபவத்தில் இருந்தது அதனால் தான் 1ம் பிரதிவாதி அடமானம் வாங்கி கிரையம் வாங்கியுள்ளார். அப்படியென்றால் 1ம் பிரதிவாதி ராஜவேலு பஞ்சம்மாளிடம் கிரையம் வாங்கினாரா என்றால் இல்லை எங்களிடம் கிரையம் வாங்கியுள்ளார். கொண்டாடும் பாத்தியவிடுதலை என்பது பதிவு சட்டங்களுக்கு உட்படாது என்றால் பதிவு சட்டத்திற்கு உட்பட்டதால் தான் பதிவு செய்யப்பட்டுள்ளது. நான் 27.12.2013 ம் தேதியில் இராமநாதபுரம் வட்டாட்சியரிடம் பட்டா கோரி எனது சகோதரி மூலம்

வா.சா.ஆ 1 மனு கொடுத்துள்ளேன் என்றால் சரிதான். எனது தகப்பனார் 04.03.1990–ல் இறந்துவிட்டார். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.20 வாரிசு சான்றிதழில் 04.03.1990 ல் உயிரோடு இருந்த நாகராஜன், கருப்பையா ஆகியோர்களை வாரிசு சான்றிதழில் வாரிசாக சேர்க்கவில்லை என்றால் சரிதான் உடல்நிலை சரியில்லாததால் சேர்க்கவில்லை. வா.சா.ஆ.1 மனு கொடுத்தது சேதுக்கோனார் வாரிசுகள் என்று சொல்லிதான் கொடுத்தோம் என்றால் சரிதான். அதில் எனது சகோதரி மேனகா என்ற காளீஸ்வரியை சேர்த்துள்ளேனா என்றால் அவரது கணவர் உயிருடன் இருப்பதால் அவரை சேர்க்கவில்லை. மேனகா என்ற காளீஸ்வரியின் தகப்பனார் பெயர் என்னவென்றால் ராமகிருஷ்ணன் ஆகும். எனது தகப்பனார் 1968–ல் கிரையம் வாங்கி 1990 ல் இறக்கும் வரை அவர் பெயரில் பட்டா வாங்கவில்லை என்றால் சரிதான் மீன்பிடி தொழில் சம்பந்தமாக வெளியூர் சென்றிருந்தார், மனு தாக்கல் செய்திருந்தார். 1968 முதல் 1990 ல் இறக்கும் வரை எனது தகப்பனார் மண்டபமே வரவில்லை என்றால் சரியல்ல அவர் மண்டபம் வந்ததால் தான் 1971 ல் செல்லச்சாமி தேவரிடம் சொத்தை ஒத்தி வைத்திருந்தார். அதன்பின்பு 1978–ல் மண்டபம் யாதவர் தெருவைச் சேர்ந்த கிருஷ்ணக்கோனாரிடம் 5 வருடத்திற்கு ஒத்தி வைத்திருந்தார். அதன்பின்பு 1985 ல் மண்டபம்மறவர் தெருவைச் சேர்ந்த சுரேஷ் நம்புகுமாரிடம் அடமானம் வைத்திருந்தார். அவர் இறக்கும் வரை அவரது அனுபவத்தில் இருந்தது. நான் மேலே சொன்ன செல்லச்சாமி தேவர் 1922 ல் இறந்துவிட்டார் அந்த செல்லச்சாமி தேவர் தான் சின்னக்குட்டி அம்மாளுக்கு 22.08.1922 ல் கிரையம் எழுதிக்கொடுத்துள்ளார் என்றால் சரிதான். (செல்லச்சாமி தேவர் இல்லை செல்லச்சாமி சேர்வை என சாட்சி தானாக சொல்கிறார்) செல்லச்சாமி சேர்வை கிடையாது அங்குச்சாமி சேர்வை என்றால் சரிதான். லட்சுமி எனது தகப்பனார் சேதுக்கோனார் கிரையம் கொடுத்தவர் என்றால் சரிதான். லட்சுமி முன்னோருக்கு சொத்திற்கு பட்டா எதுவும் கிடையாது என்றால் சரிதான் அந்த காலத்தில் அந்த தெருவில் யாருக்குமே பட்டா கிடையாது. வா.சா.ஆ.1 ல் மனுவில் எந்த புல எண்ணையும் குறிப்பிட்டு எனக்கு பட்டா கொடுக்க வேண்டும் என்று சொல்லவில்லை என்றால் சரிதான் பத்திரப் படி கொடுத்தோம். 1983 ல் அரசாங்கம் நிலவுடைமைமேம்பாட்டுதிட்டத்தின் கீழ் சொத்தை அனுபவம் செய்து வருபவர்களுக்கு அரசாங்கமே பட்டா வழங்கியது அப்போதும் நாங்கள் பட்டா எதுவும் பெறவில்லை

என்றால் மீன்பிடி தொழில் சம்பந்தமாக வெளியூர் சென்றதால் யூடிஆர் காலத்தில் பட்டா பெறவில்லை விண்ணப்பம் செய்துள்ளோம். நான் இராமநாதபுரம் RDO க்கு அனுப்பிய மனு வா.சா.ஆ 2 ஆகும் அதில் சொத்தை 1ம்பிரதிவாதிக்கு அடமானம் வைத்து அதை மீட்டி இன்றுவரை நானும், எனது சகோதரியும் தான் அனுபவம் செய்து வருகிறோம் என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். 11.07.2001ல் எங்கள் குடும்ப உறுப்பினர்கள் அனைவரும் சேர்ந்து 1, 2 இலக்க சொத்தை சாட்டிகை காட்டி 1ம்பிரதிவாதிக்கு கிரையம் கொடுத்துள்ளார்கள் என்றால் சரியல்ல எல்லோரும் கிரையம் கொடுக்கவில்லை 8 வாரிசுகளில் 5 பேர் தான் கிரையம் கொடுத்துள்ளோம், மேற்கு பக்கத்திலுள்ள 1வது இலக்க சொத்தை மட்டும் கொடுத்துள்ளோம். என்னிடம் காட்டப்படும் 1ம் பிரதிவாதிக்கு நாங்கள் கொடுத்த கிரைய ஆவணம் வா.சா.ஆ.23ல் 3வது நபராக நான் தான் கையொப்பம் செய்துள்ளேன் என்றால் சரிதான். அந்த வா.சா–ஆ.23 பத்திரத்தில் 1வது இலக்க சொத்தை தான் கிரையம் கொடுப்பதாகவும், 2வது இலக்க சொத்தை கிரையம்கொடுக்கவில்லை என்று எந்த இடத்திலாவது சொல்லப்பட்டுள்ளதா என்றால் சொல்லப்படவில்லை சொல்லவேண்டிய அவசியமில்லை. நான் வா.சா.ஆ.5 SPக்கு அனுப்பிய புகார் மனுவில் 2ம்பிரதிவாதி மாமனார் கோவிந்தக்கோனார் எங்கள் வீட்டில் குடியிருந்ததாகவும், அவர் 3 ஆண்டுகளுக்கு முன்பு காலி செய்துவிட்டதாகவும், அந்த இடம் காலி மனையாக உள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் சொல்வது பொய் 2ம்பிரதிவாதி மாமனார் கோவிந்தன் தாவா சொத்திற்கு அடுத்த கிழக்கில் சொந்தவீடு கட்டி 1966–ல்இருந்து தனது குடும்பத்துடன் குடியிருந்து வந்து அந்தவீட்டிலேயே 23.12.2016ல் இறந்து போய்விட்டார் என்றால் சரியல்ல, அந்த கோவிந்தன் மீனவர் ஆவார் 2ம் இலக்க சொத்திற்கு கிழக்கும் மாரியம்மன் கோவிலுக்கும் கிழக்கில் குடியிருந்தார். 2ம்பிரதிவாதியின் மாமனார் கோவிந்தக்கோனார் அந்த வீட்டிலேயே தான் குடியிருந்து கோவிந்தக்கோனார் அந்த வீட்டிலே தான் இறந்துபோய் அவரது இறுதிசடங்கு நடைபெற்றது என்பது எனக்கு நேரில் தெரியும் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல, அந்த கோவிந்தக்கோனர் அரசு ஊழியர். வா.சா.ஆ.5 SPக்கு அனுப்பிய புகார் மனுவை இராமேஸ்வரம் துணைக்காவல் கண்காணிப்பாளருக்கு அனுப்புனீர்களா இல்லை மாவட்ட காவல் கண்காணிப்பாளருக்கு அனுப்பினீர்களா

என்றால் இருவருக்கும் நேரிலும், தபால் மூலமாக அனுப்பினேன். அந்த வா.சாஆ.5 யுடன் உள்ள அஞ்சலக ஒப்புதல் அட்டையில் இராமேஸ்வரம் துணைக்காவல் கண்காணிப்பாளருக்கு அனுப்பியதாக உள்ளது என்றால் சரிதான். நான் நேர்மையான முறையில் நியாயமான காரணத்திற்காக வா.சா.ஆ–5 புகார் மனுவை அனுப்பவில்லை என்றால் சரியல்ல. 27.12.2013 ம் தேதி இராமேஸ்வரம் வட்டாட்சியருக்கு அனுப்பிய வா.சா.ஆ 1 மனுவில் வரிசை எண்.4 ல் கருவூலகத்தில செலான் செலுத்தி அதற்குரிய ரசீதை இத்துடன் இணைத்துள்ளேன் என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். அந்த செலான் வா.சாஆ.1 உள்ளதா என்றால் இல்லை. அந்த செலான் ரசீது இல்லை என்றால் இடத்தை அளவீடு செய்யமாட்டார்கள் என்றால் சரிதான். நான் வா.சா.ஆ 1 ஆவணத்தை எனது வசதிக்காக மனு கொடுத்தோம் என்பதை காட்டி்கொள்வதற்காக உருவாக்கியுள்ளேன் என்றால் சரியல்ல மனு கொடுத்துள்ளதால் தான் மாவட்ட ஆட்சியர் குறிப்பாணை அனுப்பியுள்ளார். என்னிடம் காட்டப்படுவது நான் மாவட்ட ஆட்சியருக்கு அனுப்பிய மனு வா.சா.ஆ.4 என்றால் சரிதான். அந்த மனுவில் 24.02.2015, 29.06.2015, 02.01.2016, 21.08.2018 ஆகிய தேதிகளில் மனு அனுப்பியதாக சொல்லியதில் அந்த மாதிரி நான் மனு எதுவும் அனுப்பவில்லை என்றால் அனுப்பியுள்ளேன் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன். என்னிடம் காட்டப்படும வா.சா.ஆ.7 நான் LIC க்கு பிரிமீயம் செலுத்தியது. வா.சா.ஆ.8 என்பது எனது சகோதரர் கருப்பையா மீன்வளத்துறை உறுப்பினர் என்பதை காட்டக்கூடிய அட்டை என்றால் சரிதான். வா.சா.ஆ.7, 8 ஆகிய ஆவணத்தில் கதவு எண் போடப்பட்டுள்ளதா என்றால் இல்லை அது அதிகாரிகளின் தவறாகும். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.9 நான் 2, 7, 8 ஆகிய பிரதிவாதிகளுக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு என்றால் சரிதான். அதில் வீட்டுக்கதவு எண்.15/60 என்றுபோடப்பட்டுள்ளது என்றால் சரிதான். கதவு எண்.15/60 என்ற எண் உள்ள வீடு எதுவும் தாவா சொத்தில் 2000 ம் ஆண்டுக்கு பின்பு இல்லை அந்த வீடு அழிந்து போய்விட்டதாக வா.சா.ஆ.23 கிரைய ஆவணத்தில் நானே சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல வீடு உள்ளது. நான் வா.சா.ஆ.5 SP க்கு அனுப்பிய மனுவில் தாவா இடம் காலி மனையாக உள்ளது என்று 23.06.2015 தேதியில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான் அந்த நேரத்தில் புயல் அடித்தது வீடு வேலை பார்த்துகொண்டிருந்தோம். தாவா சொத்து என்று

வழக்குரையில் சொல்லியுள்ள 15/55, 15/66 ஆகிய வீடுகள் தற்போது உள்ளதா என்றால் 2015 வரை இருந்தது 1ம் பிரதிவாதி தூண்டுதலின் பெயரில் 2ம் பிரதிவாதி சௌந்தரவள்ளி ஆக்கிரமிப்பு செய்து வீட்டை சேதப்படுத்திவிட்டார் அது சம்பந்மாக புகார் கொடுத்துள்ளோம். தாவா சொத்தை நீதிமன்ற ஆணையர் பார்வையிட்ட போது இந்த இடத்தில் வீடு இருந்தது அதனை அறிக்கையில் குறிப்பிடுங்கள் என்று சொன்னேனா என்றால் இல்லை தற்போது தான் ஆணையர் பார்வையிட்டார். அறிக்கைக்கு ஆட்சேபனை தெரிவித்துள்ளேன்.

குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது.

ஒம்/–S.இளையராஜா,
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர்,
இராமேஸ்வரம்